சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 50/2021

2025ம் ஆண்டு ஜூன் மாதம் 23ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு. சுரேஷ் த/பெ. முனுசாமி | நாள் 23.06.2025 |
| வயது. 39 | தொழில் |
| கிராமம். வேலாமூர் | வட்டம். |

<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் மனுவில் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.1.** என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.த.சா.ஆ.2 மற்றும் 3**. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ. 4 மற்றும் 5**. 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்ட வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் **ம.த.சா.ஆ.6**. அதனை அவர்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை ரசீது **ம.த.சா.ஆ.7**. 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் அனுப்பிய பதில் அறிவிப்பு **ம.த.சா.ஆ.8**. செங்கல்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலகருக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் **ம.த.சா.ஆ.9**. அதனை அவர்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை ரசீது **ம.த.சா.ஆ.10**. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய புறநோயாளி பதிவேடு, பரிந்துரை ரசீதுகள் மற்றும் மருத்துவ செலவீன ரசீதுகள் **ம.த.சா.ஆ.11 முதல் 13**. மருத்துவக் குழுமத்தால் எனக்கு வழங்கப்பட்ட இயலாமைச் சான்றிதழ் **ம.த.சா.ஆ.14**. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை, தோன்றாத் தரப்பினர்